[1981 மார்ச் 24]

அவர்கள்கூட சாப்பிட்டுப் பார்த்திருக்கிறார்கள். லெட்டர் போட்டு வெளிநாடுகளிலிருந்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள். ஆகவே அரசே அதைக் கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுசெய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ராஜபாளையம் மாம்பழங்களும் சுவையானவை, சேலம் மாம்பழங்களும் சுவையானவை. மாம்பழங்களுக்குள்ளே பாகுபாடு பார்க்க வேண்டாம்.

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே, சேலம், வட ஆற்காடு மாவட்டங்களைத் தவிர, தர்மபுரி மாவட்டத்திலே அதிகமாக மாம்பழம் உற்பத்தியாகிறது. அப்படி உற்பத்தியாகிற மாம்பழங்களை வைத்து உணவுப் பண்டங்கள் தயாரித்து வெளிநாடுகளுக்கு தனியார்கள் ஏற்றுமதி செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்தத் தொழிலிலே பலர் இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே அரசே தனியாகவோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ நிறுவனத்தைத் தொடங்கி அவைகளைக் கொள்முதல் செய்து உணவுப் பண்டங்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்கு மார்க்கட் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றி அரசு ஆராயும்.

சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் மரக்காணம் ஒன்றியம்.

*வினா எண் 459—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் வட்டம் மரக்காணம் ஒன்றியத்தை சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் ஒன்றியமாக அறிவிக்கும் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் இணைத்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் முதல் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தை மரக்காணம் ஒன்றியம் உட்பட எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS